Agence de la santé
et des services sociaux
de Montréal
Québec
Direction de santé publique

# சின்னம்மை சம்பந்தமான முக்கிய தகவல் அறிவிப்பு- பெற்றோர் கவனத்திற்கு

சித்திரை 2011 முதல் கியூபெக்கில் உக்கிரமான சின்னம்மை வியாபித்துள்ளது. **750க்கும் மேற்பட்ட நோய் நிகழ்வுகள், அதில் மூன்றில் இரண்டு பங்குகள் கல்வித் திட்டச் சூழல்களில் கணக்கிடப்பட்டுள்ளன. இது, 2002**ற்குப் பிறகு அமெரிக்கா முழுவதும் வியாபித்துள்ள அதி உக்கிர சின்னம்மை பெருவாரி நோய் பற்றியது.

சின்னம்மையானது மிக உக்கிரமான நோய் என்பதுடன், இலகுவில் தொற்றக்கூடிய நோய் என்றும், அதுவும் இன்னொரு நோயாளியின் சுவாசம் கலந்த காற்றை சுவாசிப்பதன் மூலமே தொற்றக்கூடியதாகும். கடுமையான காய்ச்சல், மூக்கு வழிதல், கண்கள் சிவந்து கண்ணீர் வழிதல், இருமல் அத்துடன் உடலில் சிவப்பு பருக்கள் உண்டாகுதல் போன்றவை சின்னம்மை நோயின் அறிகுறிகளாகும்.

நுரையீரல் அழற்சி (நிமோனியா) அல்லது மூளையழற்சி (encéphalite) போன்ற மிக சிக்கலான நோய்கள் உருவாகவும் சின்னம்மை காரணமாக இருக்கிறது.

**நோய்த்தடுப்பூசிப் பிரச்சாரம்**

உடலாரோக்கியத் திட்ட வலையம், கல்விச்சூழல் திட்ட வலையத்தின் ஒத்துழைப்புடன் **சகல கியூபெக் பாடசாலைகளிலும் தடுப்பூசிப் பிரச்சாரத்தை மேற்கொள்கிறது. சின்னம்மையிலிருந்து தற்காப்புப் பெற நோய்த்தடுப்பூசி ஒன்றே மிகச் சிறந்த வழியாக இருக்கிறது.**

தேவையான அளவை தடுப்புமருந்து பெறாத அல்லது தடுப்பூசி அத்தாட்சி ஏடு அற்ற மாணவர்கள், மற்றும் பயிற்றுநர்களுக்கு நோய்த்தடுப்பூசி ஏற்றுவதே நோக்கமாகும். விதிவிலக்கான காரணம் தவிர, தை 2012இலிருந்து மொன்றியால் பாடசாலைகளில் நோய்தடுப்பூசி ஏற்றுதல் தொடங்கும்.

சின்னம்மைப் பரவலைத் தடுப்பதற்கு தற்போது தடுப்பூசி பெற்றவர்களின் எண்ணிக்கை நோய்ப் பரவலைத் தடுக்கப் போதுமானதாக இல்லை. சின்னம்மை தொற்றிக்கொள்ளும் ஆபத்து கியூபெக்கில் பத்தில் ஒரு பிள்ளைக்கு என்ற வீதத்தில் உள்ளது. இப்பிள்ளைகள் மற்ற மாணவர்களுக்கு, அல்லது நோய்த்தடுப்பூசி இன்னும் பெறமுடியாத குழந்தைகள் அல்லது கற்பவதிகள் அல்லது சில மருத்துவச் சிக்கலான நிலையினால் தடுப்பூசி பெற்றுக்கொள்ள இயலாதோர் போன்றவர்க்குக் கொடுத்து விடுவார்கள்.

**உங்கள் குடும்பத்தினர் பெற்ற தடுப்பு மருந்தானது இன்றைய நிலைக்கேற்ப முழுமை பெற்றவையா?**

உங்கள் பிள்ளையின் தடுப்பூசி ஏட்டை எடுங்கள். நோய்த்தடுப்பூசி அளிக்கும்போது அது தேவை.

உங்கள் பிள்ளை தடுப்பூசி பெற்றிருந்தால், அந்தத் தடுப்பூசிகளின் பெயர்களைப் பின்வருமாறு அந்தத் தடுப்பூசி ஏட்டில் காணலாம்: M-M-R, M-M-R II, Priorix அல்லது Priorix-Tétra, Trivirix, Attenuvax, Rimevax, Rubeovax, Lirugen, M-R Vax, vaccin anti-rougeoleux.

# சின்னம்மை சம்பந்தமான முக்கிய தகவல் அறிவிப்பு-
# பெற்றோர் கவனத்திற்கு

**இல்லாத செய்தி, நல்ல செய்தியே!**

போதுமான தடுப்பூசி பெறாதோர் அல்லது தகுந்த நோய்த்தடுப்புசி ஏடு போன்ற அத்தாட்சி அற்றவர்கள் தொடர்பு கொள்ளப்படுவர். உங்கள் பிள்ளையின் நிலை அதுவானால், ஒரு அங்கீகாரப் படிவம் அல்லது நோய்த்தடுப்பூசி அத்தாட்சி கோரிக்கை கிடைக்கப் பெறுவீர்கள். நோய்த்தடுப்பு மருந்து பாடசாலையில் அளிக்கப்படும்.

14 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மாணவர்கள் நோய்த்தடுப்பு ஊசி பெறத் தாமே இணக்கம் தெரிவிப்பர்.

**நோயின் நிகழ்வு தென்படும் சந்தர்ப்பத்தில்**

பாடசாலையில் சின்னம்மை நோயின் நிகழ்வு ஒன்று இருப்பின், பாதுகாப்புப் பெறாத மாணவர்கள் மற்றும் சேவையாளர்கள் தற்காலிகமாகத் தவிர்த்து (விலக்கி) வைக்கப் படுவர்.

உங்கள் பிள்ளைக்குச் சின்னம்மை நோய் பற்றிக்கொண்டால், வீட்டில் தங்கவைத்து, உடலாரோக்கிய தகவல் மையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

சின்னம்மை பற்றிய மேலும் விவரங்களுக்கும், தடுப்பூசி மற்றும் பாடசாலைகளில் நடத்தப்படும் பிரசாரத் திட்டங்கள் பற்றியும் அறிந்து கொள்ள www.msss.gouv.qc.ca/rougeole என்ற இணையத்தளத்தைப் பார்வையிடாலம் அல்லது Info Santé 8-1-1க்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம்.

டாக்டர் ரிச்சார்ட் லெசார்ட்
பொது உடல்நலஆரோக்கிய நடத்துநர்
உடல்நலஆரோக்கியம் மற்றும் மொன்றியால் சமூகசேவைகள் நிறுவனம்

# தடுப்பூசி மருந்து RRO

## சின்னம்மை, கொப்புளிப்பான், கூகைக்கட்டு போன்ற நோய்களுக்கு எதிரான கூட்டுத் தடுப்பூசி மருந்து

*«தடுப்பூசியேற்றம் ஒரு சிறந்த பாதுகாப்பாகும்»*

சின்னம்மை, கொப்புளிப்பான், கூகைக்கட்டு மற்றும் அவற்றால் ஏற்படக்கூடிய சிக்கல்களில் இருந்து இத்தடுப்பூசி மருந்தைப் பெறுபவர் பாதுகாக்கப்படுகிறார்.

| | சின்னம்மை | கொப்புளிப்பான் | கூகைக்கட்டு |
|---|---|---|---|
| நோய்கள் | **சின்னம்மையின் விளைவுகள் :**<br>- செந்நிறத் தோல்திட்டுகள்<br>- இருமல்<br>- காய்ச்சல்<br>- விழிவெண்படல அழற்சி (விழிகள் சிவத்தல்)<br>- உடல் முழுவதும் பொதுவாக மாற்றமான தன்மை | **கொப்புளிப்பானின் விளைவுகள்:**<br>- செந்நிறத் தோல்திட்டுகள்<br>- நரம்புத் திரள் வீக்கம்<br>- மூட்டு வாதம் (முக்கியமாகப் பெண்களிடத்தில்) | **கூகைக்கட்டின் விளைவுகள்:**<br>- காய்ச்சல்<br>- தலைவலி<br>- தாடையின் கீழ் இருக்கும் ஓமோன் சுரப்பிகளின் வீக்கம் |
| | **சின்னம்மையினால் உருவாகக் கூடிய சிக்கலான விளைவுகள்:**<br>- செவியழற்சி (5 இலிருந்து 9% நிகழ்வுகளில்)<br>- மார்சளிக்காய்ச்சல் (1 இலிருந்து 5% நிகழ்வுகளில்)<br>- வலிமாந்தம்<br>- மூளையில் நிரந்தர பாதிப்புக்கள் (1000 இல் ஒரு நிகழ்வு)<br>- இறப்பு (3000இல் ஒரு நிகழ்வு) | **கொப்புளிப்பானால் உருவாகக் கூடிய சிக்கலான விளைவுகள் :**<br>- கற்பவதிகளின் கருச்சிதைவு ;<br>- கொப்புளிப்பானுக்கு ஆளான கற்பவதிகளின் சிசுக்களின் இயல்பற்ற உருவ வளர்ச்சி | **கூகைக்கட்டினால் உருவாகக் கூடிய சிக்கலான விளைவுகள் :**<br>- மூளைக்காய்ச்சல் (10 இலிருந்து 30 % நிகழ்வுகளில்)<br>- செவிட்டுத்தன்மை<br>- விந்தக அழற்சி<br>- கருவக அழற்சி |

## தடுப்பு மருந்து

சின்னம்மை, கொப்புளிப்பான், கூகைக்கட்டு போன்ற நோய்களிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கு தடுப்பு மருந்து ஏற்றுவதே சிறந்த வழியாகும். இப்பாதுகாப்பு வாழ்நாள் முழுவதும் நிலைக்கும். குழந்தைகளுக்கு RRO எனப்படும் இத்தடுப்பு மருந்து அவர்களின் வயது 12 மாதமாகவும், 18 மாதமாகவும் இருக்கையில் அளிக்கப்படும்.

RRO எனும் தடுப்பு மருந்தானது பாதுகாப்பானது. பெரும்பான்மையான எதிர்விளைவுகள் சாதுவாகவும், குறுகிய காலத்தில் மறைந்தும் விடும். தென்படும் அறிகுறிகள் தடுப்பு மருந்தினால் தான் உருவானது என்ற அவசியமில்லை. தடுப்பு மருந்து பெறும் பெண்கள் தொடர்ந்து வரும் மாதத்தில் கருத்தரிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

| | தடுப்பு மருந்தினால் வரக்கூடிய எதிர்விளைவுகள் | செய்ய வேண்டியவை |
|---|---|---|
| எதிர்விளைவுகள் | - ஊசி குத்திய இடத்தில் வலி, சிவந்த தன்மை, வீக்கம் (1 இலிருந்து 9% வரை) போன்றவை.<br>- தடுப்பு மருந்து பெற்ற 5ம் நாளிலிருந்து 12ம் நாட்களுக்குள், சாதுவான காய்ச்சல் (10 இலிருந்து 49% வரை) மற்றும் தொற்றும் தன்மையற்ற செந்நிறத் திட்டுக்கள் (1 இலிருந்து 9% வரை)<br>- கடுமையான காய்ச்சல் (1 இலிருந்து 9% வரை), நடுக்கம், (1000 இற்கு 1 இலிருந்து 9 வரை), வலிப்புக்கள் (10,000 இற்கு 1 இலிருந்து 9 வரை).<br>- எரிச்சல், தூக்கச் சோர்வு, விழிவெண்படல அழற்சி, வயிற்றோட்டம் (1 இலிருந்து 9 வரை). | - ஊசி ஏற்றப்பட்ட இடத்தில் ஈரமான, குளிர் ஒத்தடம் தரவும்.<br>- உடல் வெப்பநிலை 38.5°C அல்லது கூடுமானால் acétaminophène அல்லது ibuprophène போன்ற மருந்து வகையில் ஒன்றினைப் பாவிக்கவும். |
| | - மூட்டுக்களில் வலி (பிள்ளைகளுக்கு 1 இலிருந்து 9% வரையும், பெரியவர்களுக்கு 10 இலிருந்து 49% வரையும்).<br>- நரம்புத் திரள் வீக்கம் மற்றும் தாடை அருதே இருக்கும் ஓமோன் சுரப்பிகளின் வீக்கம் (100,000 இற்கு 1 இலிருந்து 9 வரை).<br>- இரத்த உறைதலுக்கு உதவும் குருதி அணுக்களின் தற்காலிக | -<br>- அறிகுறிகளின் உக்கிரத்தைப் பொறுத்து வைத்தியரின் ஆலோசனையை நாடவும்.<br>- . |